செ.வெ.எண்: 58 நாள்:23.10.2019

# 100 சதவீத மானியத்துடன் அமைக்கப்படும் பண்ணைக்குட்டைகள்

கரூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடப்பு 2019-20- ம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக 20 பண்ணைக்குட்டைகள் நபார்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளது.

விவசாயத்தில் பண்ணைக்குட்டையின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு 2019-20-ம் ஆண்டில் 8202 பண்ணைக்குட்டைகள் ரூ.82.02 கோடி செலவில் அமைக்க அரசாணை எண். 200 வேளாண்மை (AE-2) துறை நாள்:12.09.2019-ன்படி தமிழக அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதில் கரூர் மாவட்டத்தில் 20 பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, மழைக்குறைவின் காரணமாக இம்மாவட்டத்தில் அடிக்கடி வறட்சி ஏற்பட்டு, விளைச்சல் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர் கொள்கின்றனர். இதற்கு முதன்மையான காரணம் பயிர்களுக்கு தேவையான நேரத்தில், தேவையான அளவு பாசனநீர் கிடைக்காததே ஆகும். இதற்கு தீர்வாக வயல்வெளிகளில் பண்ணைக்குட்டைகள் அமைத்து பெய்யும் மழைநீரை முறையாக சேமித்தால், இந்த நீரைக்கொண்டு தேவையான நேரத்தில் பயிர்களுக்கு உயிர்நீர் அளித்து, நல்ல மகசூலை விவசாயிகள் அடையலாம். இதனால் நல்ல வருவாயும் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பண்ணைக்குட்டையினை நீர் ஆதாரமாக கொண்டு தெளிப்பு நீர் பாசன அமைப்பை நிறுவி, பயிர்களுக்கு சிக்கனமான முறையில் நீர் பாய்ச்சுவதன் மூலம் கூடுதலான பரப்பில் பாசன வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம். பண்ணைக்குட்டைகளில் மீன்கள் வளர்த்து அதன்மூலம் கூடுதல் வருமானத்தையும் விவசாயிகள் பெறலாம்.

சுமார் 45 செண்ட் பரப்பளவில், 30 மீட்டர் (100 அடி) நீளமும், 30 மீட்டர் அகலமும், 2.00 மீட்டர் (6.6 அடி) ஆழமும் கொண்ட பண்ணைக்குட்டையினை அமைத்தால், இதில் 18,00,000 லிட்டர் நீர் (அல்லது) 63,500 கனஅடி நீர் சேமிக்கப்படுகிறது. 30 மீட்டர் நீளம், 30 மீட்டர் அகலம் மற்றும் 2 மீட்டர் ஆழம் கொண்ட பண்ணைக்குட்டை அமைப்பதற்கு 1.00 இலட்சம் செலவாகிறது. இப்பண்ணைக்குட்டைகள் 100 சதவீத மானியத்துடன் அரசு செலவில் விவசாயிகளுக்கு அமைத்துக் கொடுக்கப்படுகிறது. பண்ணைக்குட்டையின் நீளம், அகலம் மற்றும் ஆழத்தினை நிலத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளலாம்.

நடப்பு 2019-20-ம் ஆண்டில் கரூர் மாவட்டத்தில் 20 பண்ணைக் குட்டைகள் அமைக்க தற்போது இலக்கு பெறப்பட்டுள்ளது. ஒரு பண்ணைக்குட்டை அமைப்பதற்கு ரூ. 1.00 இலட்சம்

வீதம் 20 பண்ணைக்குட்டைகள் அமைக்க இம்மாவட்டத்திற்கு ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், பண்ணைக்குட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்களது பட்டா நகல், அடங்கல், மற்றும் புலவரைபட நகல் ஆகிய ஆவணங்களுடன் கீழ்க்கண்ட முகவரியில் இயங்கும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கரூர் உபகோட்ட அலுவலக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), திரு.க.சக்திவேல் அவர்களின் அலைபேசி எண் 9443567583 மற்றும் குளித்தலை உபகோட்ட அலுவலக உதவி செயற்பொறியாளர்(வே.பொ), திரு. இரா.அசோகன் அவர்களின் அலைபேசி எண் 9443547210 -ஐ தொடர்பு கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்:</u>**

- செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 107, நவலடியான் காம்ப்ளெக்ஸ், அண்ணாநகர், மில்கேட், தாந்தோணிமலை அஞ்சல், கரூர் - 639 005. தொலைபேசி எண்: 04324 255850
- உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 77/1, ராமச்சந்திரா காம்ப்ளக்ஸ், முதல் தளம், கருப்பக்கவுண்டன்புதூர் பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் - 639 004.
- உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 20-G4 பரிசல் துறை ரோடு, பெரியபாலம், குளித்தலை - 639 104.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.